Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 053 | சனிக்கிழமை Saturday | 23.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# த.வெ.க. அரசில் அமைச்சர்களாக வன்னி அரசு, ஷாஜகான் பதவியேற்பு

## எங்கள் கனவு நனவாகியுள்ளது என திருமாவளவன் நெகிழ்ச்சி




சென்னை:

விளிம்பு நிலையை சார்ந்தவர்கள் இரண்டு இடங்களை பெற்றிருந்தாலும் கூட ஆட்சியில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சி அளிப்பதாகவும், தங்களது கனவு நனவாகியுள்ளதாகவும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் வன்னி அரசு அமைச்சராக இன்று காலை பதவியேற்றார். இதனையடுத்து சென்னை தலைமைச் செயலகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் எம்பி முன்னிலையில் சமூக நீதித் துறை அமைச்சராக வன்னி அரசு இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

விசிக தலைவர் தொல் திருமாவளவன், பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், விசிக பொதுச் செயலாளர் சிந்தனைச்செல்வன் ஆகியோர்வன்னிஅரசை 'அமைச்சர்' இருக்கையில் அமர வைத்தனர். தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், முதலமைச்சர் விஜய்யை சந்தித்தார்.

முன்னதாக பேசிய சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு, "திருமாவளவனுக்கும், மக்கள் பணியாற்ற வாய்ப்பளித்த திண்டிவனம் தொகுதி மக்களுக்கும் நன்றி. தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சி என்று எதுவும் இல்லை.கடந்தகாலங்களில் மக்களுக்காக களத்தில் இருந்து போராட்டங்கள் நடத்தி வந்த எனக்கு அதிகாரத்தில் இருந்து மக்கள் பணியாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. மிகப் பெரிய பொறுப்பை தலைவர் திருமாவளவன் எனக்கு வழங்கி உள்ளார். இந்த பொறுப்பை சிறப்பாக செய்து நம்பிக்கைகுரியவனாக இருக்க வேண்டும். எந்த மாற்றமாக இருந்தாலும் அது மக்களுக்கான மாற்றமாக இருக்கவேண்டும்.சமூக நீதித்துறையில் பல்வேறு மாற்றங்கள் நடைபெறும். நீங்கள் அதை பார்க்கப் போகிறீர்கள்" என்றார்.

இதனையடுத்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் எம்பி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "இன்று விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆட்சி அதிகாரத்தில் பங்கு பெறும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இந்த நிலையை எட்டுவதற்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும் நாங்கள் அங்கம் வகித்த மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கும், மதச்சார்பற்ற அரசைஅமைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, அதிகாரத்தை பகிர்ந்து அளித்த தவெக தலைவர் முதல்வர் விஜய்க்கும் நன்றி.

எங்கள் கனவு நனவாகியுள்ளது. தமிழகத்தில் கூட்டணி ஆட்சி மலர வேண்டும் என்று தொடர்ந்து பத்து ஆண்டுகள் பேசி வந்தோம். இன்று அது நிறைவேறியுள்ளது. தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி மலர்ந்துள்ளது. விளிம்பு நிலையைச் சார்ந்தவர்கள் இரண்டு இடங்களை பெற்றிருந்தாலும் கூட ஆட்சியில் பங்கு பெறும் வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி" என்றார்.

# "யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களைப் பேச வேண்டாம்"

## தி.மு.க.வினருக்கு மு.க.ஸ்டாலின் அறிவுரை



சென்னை: தமிழக அமைச்சர்களாக இன்று பதவியேற்ற விசிக எம்எல்ஏ வன்னியரசுக்கும், ஐயூஎம்எல்ஏ ஷாஜஹானுக்கும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். கூடவே,அவர்கள்தவெக அமைச்சரவையில் இடம்பெற்றது குறித்து கடுஞ்சொற்களால் விமர்சிக்க வேண்டாம் என்று திமுகவினருக்கு ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுள்ள நம் கொள்கைத் தோழமைகள் வன்னியரசுக்கும், ஷாஜஹானுக்கும்எனது வாழ்த்துகள்! தங்களது அரசியல் முடிவைத் தீர்மானிக்கும் உரிமை எந்தக் கட்சிக்கும் உண்டு. எனவே திமுகவினர் இந்த நேரத்தில் யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களைப் பேச வேண்டாம் என்பதுதான் உங்கள் தலைவராக எனது அன்பு வேண்டுகோள்.

அண்ணா வழியிலும், கலைஞர் வழியிலும் வந்தவர்கள் நாம். அதை மறந்திட வேண்டாம். நல்லதைப் பாராட்டி, அல்லதை விமர்சிக்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்." என்று ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக ஆட்சியமைக்க உரிமை கோரியது. ஆட்சியமைக்கத் தேவையான 118 இடங்களுக்காக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் ஆதரவைப் பெற்றது.


விசிக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்)கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவு என்று அறிவித்த நிலையில் தவெகவின், முதல்வர் விஜய்யின் கோரிக்கைகளை ஏற்று இரண்டு கட்சிகளும் அமைச்சரவையில் இணைந்தன.

இதனையடுத்து, விசிகவின் வன்னியரசு, ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹானுக்கு அமைச்சர்களாக, ஆளுநர் ஆர். வி.அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இவர்களுக்கான இலாகாவும் ஒதுக்கப்பட்டது. அதன்படி, ஐயூஎம்எல் கட்சியின் ஷாஜஹான் சிறுபான்மை நலத்துறை அமைச்சராகவும், விசிகவின் வன்னியரசு சமூகநீதித் துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தவெக அமைச்சரவையில் விசிக, ஐயூஎம்எல் இடம்பெறும் என்ற அறிவிப்பு நேற்று வெளியான நிலையில் நேற்று பின்னிரவில் திமுக எம்.பி. ஆ.ராசா ஒரு ட்வீட்டை பதிவு செய்து பின்னர் அதை நீக்கினார். இருப்பினும் அதன் ஸ்க்ரீன் ஷாட்கள் இணையத்தில் உலாவி திமுகவுக்கு வசைகளைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கின்றன. தொடர்ந்து இன்று காலையில் மற்றுமொரு ட்வீட்டையும் அவர் பதிவு செய்தார்.

திமுக தலைவர் ஸ்டாலின் விசிக, ஐயூஎம்எல் கட்சிகளை கொள்கை தோழனை ஏன்று அழைத்ததோடு, "யாரையும் புண்படுத்தும்படி கடுஞ்சொற்களைப் பேச வேண்டாம்" என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழகத்தில் ஜூன் 18ல் மாநிலங்களவை இடைத்தேர்தல்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு




சென்னை:

தமிழ்நாட்டில்காலியாகவுள்ள ஒரு மாநிலங்களவை இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18–ஆம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.வி. சண்முகம், தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை முறைப்படி ராஜினாமா செய்தார்.

இந்த நிலையில், தமிழ்நாட்டின் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலியானதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, ஜூன் 18 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும். ஜூன் 1 ஆம் தேதி வேட்புமனுத் தாக்கல் தொடங்குகிறது.ஜூன் 11வேட்புமனுவை திரும்பப் பெறகடைசிநாளாகும். ஒருவருக்கு மேல் போட்டியிடும் பட்சத்தில்,ஜூன் 18 ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, அன்று மாலையே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 10 மாநிலங்களில் உள்ள தற்போதைய உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைய இருப்பதால், 24 இடங்கள் காலியாகின்றன. அதோடு, மகாராஷ்டிராவிலும் மாநிலங்களவை பதவியை தேசியவாத காங்கிரஸ் தலைவர் சுனேத்ரா அஜித் பவார் ராஜினாமா செய்திருந்தார். இந்த காலியிடங்களுக்கும் ஜூன் 18 இடைத்தேர்தல் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் 27ம் தேதி வரை கனமழை: சென்னை, புறநகரில் வெப்ப அலை வீசும்



சென்னை: தமிழகத்தில்சிலமாவட்டங்களில் மே 27–ம் தேதி வரை ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும், சென்னை, புற நகரில் வெப்ப அலை வீசவும் வாய்ப்பு உள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மத்தியவங்கக்கடல்பகுதிகளிலிருந்து தமிழகம் வரை தென்மேற்கு வங்கக்கடல் வழியாக சுமார் 3.1 கிமீ முதல் 4.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (மே 22) ஓரிரு இடங்களிலும், 23,24தேதிகளில் ஒருசில இடங்களிலும், 25 முதல் 27–ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும். 23–ம் தேதி திருவண்ணாமலை, திருச்சி, சேலம், நாமக்கல், வேலூர், திருப்பத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலும், 24–ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலும். 25–ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக் கூடும். 26–ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும்,27–ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழைபெய்யக் கூடும்.

உள் தமிழக பகுதிகளில் இன்று முதல் 24–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கும்.கடலோரதமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன் ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில்வெப்பஅலைவீசக் கூடும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 107 டிகிரி,குறைந்தபட்சவெப்பநிலை 86 டிகிரி ஃபாரன் ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

18 இடங்களில் வெயில் சதம் : தமிழகத்தில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை அளவுகளின்படி அதிகபட்சமாக வேலூரில் 108 டிகிரி திருத்தணியில் 107 டிகிரி, சென்னை மீனம்பாக்கத்தில் 106 டிகிரி வெயில் பதிவானது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தூத்துக்குடி முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் 36வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காங்கிரஸ் கட்சியினர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர் முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் 36 வது ஆண்டு நினைவு நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது இதைத்தொடர்ந்து தூத்துக்குடி ஸ்மார்ட்சிட்டி பேருந்து நிலையம் முன்பு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட தலைவர் சகாயராஜ் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர் பின்னர் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழியை எடுத்தனர் இதில் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி 59 ஆண்டுகள் கழித்து தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி இடம்பெற்றதை தொடர்ந்து தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பாக பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம் தமிழக அமைச்சரவையில் இன்று காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ராஜேஷ் குமார் விஸ்வநாதன் ஆகிய இரண்டு பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர் 59 ஆண்டுகளுக்கு பின்பு தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி பங்கேற்றதை தொடர்ந்து தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி பேருந்து நிலையம் முன்பு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் சகாயராஜ் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

# கடையநல்லூர் திருமலாபுரம் சக்சஸ் மெட்ரிக் பள்ளி எஸ்எஸ்எல்சி தேர்வில் 100% தேர்ச்சி.



கடையநல்லூர் திருமலாபுரம் சக்சஸ் மெட்ரிக் பள்ளி எஸ்எஸ்எல்சி தேர்வில் 100% தேர்ச்சி வெளியான பத்தாம் வகுப்பு பொது தேர்வு முடிவுகளில் கடையநல்லூர் அருகே உள்ள திருமலாபுரம் சக்சஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 100 சதவீத தேர்ச்சி பெற்றது இது பற்றிய விவரமாவது

கடையநல்லூர் அருகே உள்ள திருமலாபுரம் சக்சஸ் மெட்ரிக் பள்ளி மாணவி ல. ம. மனிஷா பத்தாம் வகுப்பு தேர்வில் 500க்கு 480 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலாவதாக வந்துள்ளார் இரண்டாவதாக மாணவி தி. பிரவீனா 500க்கு 474 மதிப்பெண்கள்பெற்றுள்ளார் மூன்றாவதாக மாணவி V. ஐஸ்வர்யா பார்வதி 500க்கு 467 மதிப்பெண்கள் பெற்றுள்ளார் பள்ளியில் தேர்வு எழுதிய 21 மாணவர்கள் அனைவரும் தேர்வில் வெற்றிபெற்றுள்ளனர் 400 மதிப்பெண்களுக்கு மேல் 10 பேர் பெற்றுள்ளனர் பள்ளியில் முதல் மூன்று இடத்தையும் தேர்ச்சி பெற்ற மான மாணவிகளை பள்ளி தாளாளர் நாகராஜன் மற்றும் ஆசிரியர் ஆசிரியை பெருமக்கள் பாராட்டினர் பள்ளியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களை நிர்வாகத்தின் சார்பில் இனிப்பு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

# கோவில்பட்டியில் ராஜீவ் காந்தி நினைவு தினம் அனுசரிப்பு காங்கிரஸ் கட்சியினர் உறுதிமொழி ஏற்பு!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை முன்-



னிட்டு, கோவில்பட்டி-யில் காங்கிரஸ் சார்பில் பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தை முன்னிட்டு, தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக கோவில்பட்டி பேருந்து நிலையம் முன்பு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்தும்நிகழ்வும், பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்குத் தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பெருமாள்சாமி தலைமை தாங்கினார். நகரத் தலைவர் அருண்பாண்டியன் மற்றும் வட்டாரத் தலைவர் ரமேஷ்மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்கும் பொருட்டும், வன்முறையை ஒழிக்கும் பொருட்டும் பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் ஐஎன்டியுசி ராஜசேகரன், அய்யலுசாமி, பெத்துராஜ், ராஜாராம், ஜோஷ்வா, பிசிசி உறுப்பினர்கள் உமாசங்கர், மகேஷ்குமார், எட்டயபுரம் குணசேகரன் உள்பட காங்கிரஸ் திரளாகக் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



தென்காசி காசி விஸ்வநாதர் ஆலய முன்பாக காங்கிரஸ் கட்சிமாவட்டத் தலைவர் தலைமையில்அமைச்சரவையில்காங்கிரஸ்கட்சிஇடம்பெற்றநிலையில்பட்டாசுவெடித்து கொண்டாட்டம்.

# தூத்துக்குடியில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மாநகர் மாவட்ட தலைவர் முரளிதரன் உட்பட 50க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்தனர்

தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் முரளிதரன் மற்றும் மாநகராட்சி காங்கிரஸ் கவுன்சிலர்கள் உட்பட தலைவர் பாலசுப்பிரமணியன், இளைஞர் காங்கிரஸ் செயலாளர் ஜெயகிங்ஸ்டன் மற்றும் 27 வார்டு தலைவர்கள் உட்படப் பலர் திமுகவில் தலைவர்கள் சகாயராஜ், பெருமாள்சாமி ஆகியோர் கூட்டணி தர்மத்திற்கு எதிராகச் செயல்பட்டனர்.

36 ஆண்டுகள் காங்கி-



50-க்கும் மேற்பட்ட முக்கிய நிர்வாகிகள், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன் முன்னிலையில் எட்டையாபுரம் சாலை கலைஞர் அரங்கில் திமுகவில் இணைந்தனர்.

காங்கிரஸ் கவுன்சிலர்கள் சந்திரபோஸ், எடின்டா, முன்னாள் நகரமன்ற உறுப்பினர் வெங்கடசுப்பிரமணியன், மண்டலத்தலைவர் ராஜன், மாநில செயற்குழு உறுப்பினர் சாந்திமேரி, விவசாய அணி இணைந்தனர். அவர்களைக் கருப்பு சிவப்பு சால்வை அணிவித்து கீதா ஜீவன் வரவேற்றார்.

திமுகவில் இணைந்த பின் முன்னாள் காங்கிரஸ் மாவட்டத் தலைவர் முரளிதரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 14 ஆண்டுகளாக திமுகவுடன் இணக்கமாக இருந்த காங்கிரஸ் தலைமை, தற்போது கொள்கைகளைத் துறந்துவிட்டு 2 அமைச்சர் பதவிகளுக்காகத் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைத்துள்ளது. தூத்துக்குடி காங்கிரஸில் உழைத்த எங்களது கருத்துக்களைத் தலைமை மதிக்கவில்லை. தவெக தலைவர் விஜய் பாஜகவின் ஒரு அங்கமாகவே திகழ்கிறார். உண்மையான காங்கிரஸாரான நாங்கள் இனி கடைசி வரை திமுகவிற்கு விசுவாசமாகப் பணியாற்றுவோம் என்றார். இந்நிகழ்வில் திமுக மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், துணைமேயர்ஜெனிட்டா மற்றும் மண்டல, பகுதிச் செயலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# சேரங்கோடு ஊராட்சியில் சாலையோர முட்செடிகள் அகற்ற கோரிக்கை




கூடலூர் அருகே உள்ள சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட அம்மன்காவு பகுதிகளில் சாலையோரங்களில் அதிக அளவில் முட்செடிகள் மற்றும் கொடிகள் வளர்ந்து காணப்படுவதால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக சேரங்கோடு ஊராட்சி பொன்னானி சர்க்கரைகுளம் பகுதியில் இருந்து பந்தபிளா, அம்மன்காவு வழியாக கொளப்பள்ளி செல்லும் சாலையில் அங்கங்கே இருபுறங்களிலும் வளர்ந்துள்ள முட்செடிகள் சாலையை ஆக்கிரமித்துள்ளதால் எதிரே வரும் வாகனங்களை கவனிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருசக்கர வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் மற்றும் பள்ளி வாகனங்கள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் மழைக்காலங்களில் இந்த பகுதிகளில் பாம்பு உள்ளிட்ட விஷஜந்துக்கள் பதுங்கும் அபாயமும் அதிகரித்துள்ளதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வாகனங்கள் எதிரே வரும்போது ஒதுக்கும் சூழலில் விசஜந்துக்கள் கடிக்கும் அபாயம் உள்ளது.

எனவே, சேரங்கோடு ஊராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து சாலையோரங்களில் வளர்ந்துள்ள முட்செடிகள் மற்றும் கொடிகளை வெட்டி அகற்றி, பொதுமக்கள் பாதுகாப்பாக பயணம் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



பந்தலூர் அருகே அய்யன்கொல்லி சன்னகொல்லி பகுதியில் ஏராளமான மக்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் நேற்று நள்ளிரவு முதல் காட்டு அணைகள் உலா வந்ததால்

# தமிழ்நாடு குழந்தைகள் தேசிய அளவிலான அழகிப்போட்டி கேரள மாநிலத்தில் நடைபெற்ற நிலையில், கோவையை சேர்ந்த, ரக்ஷன் கலந்து கொண்டு வெற்றி பெற்றதுடன், சர்வதேச போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்



மேமாதம்,7,8,மற்றும் 9 ஆகிய தேதிகளில் கேரளாவில் காலிகட் நகரில் நடைபெற்ற இந்த தேசிய அளவிலான அழகு போட்டியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த திறமையான குழந்தைகள் பங்கேற்றனர். முன்னதாக கோவை, திருப்பூர், ஈரோடு, சென்னை, கோவில்பட்டி, மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் தமிழ்நாடு ஸ்டேட் டைரக்டர் எம் சிவக்குமார் தலைமையில் ஆடிஷன்கள் நடத்தப்பட்டு இறுதிப் போட்டிக்கான குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர் கோவையை சேர்ந்த, எஸ். ரக்ஷன் ஜூனியர் மாடல் இன்டர்நேஷனல் 1வது ரன்னர் அப் 2026, தமிழ் ஃபேஷன் சாகா இந்தியா 1வது ரன்னர் அப் 2026, ஃபேஷன் ஜூம் சவுத் இந்தியன் பியூட்டி ஐகான் 1வது ரன்னர் அப் 2026, ஐஎஃப்இ பெஸ்ட் சூப்பர் மாடல் 2026, பிரின்ஸ் பேர்ல் ஐகான் ஆஃப் இந்தியா, ஃபேஷன் ஸ்டார்ட்சன் இன்ஸ்டிடியூட் சிறந்த கேட்வாக் விருது ஆகியவை வழங்கப்பட்டது மேலும் இந்த வெற்றியாளர்கள் ஆகஸ்ட் 19, 20, 21, ஆகிய தேதிகளில் தாய்லாந்தில் நடைபெற்றுள்ள ஜூனியர் மாடல் இன்டர்நேஷனல் 2026 உலகளாவிய இறுதிப்போட்டியில் இந்தியாவை அதிகாரப்பூர்வமாக பிரதிநிதி த்துவமாக தகுதி பெற்றுள்ளனர் இந்த வெற்றி குறித்து இவரது தந்தை கோவை பந்தயசாலையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும்,அந்த அளவில் தனது மகன் சிறந்த கேட் வால்க் செய்வதில் தனித்துவமான திறமைமை வெளிக்காட்டி வருகின்றார். இதற்க்கு பெற்றோர்களாகிய நாங்கள் முடிந்த அளவுக்கு ஆதரவை அளித்து வருகின்றோம் என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீ.கே.புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கலைக் கதிரவன் எம்.எல்.ஏ. ஆய்வு

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலை கதிரவன் அவர்கள் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி சொல்லும் விதமாக தென்காசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வீர கேரளம் புதூர் ஊராட்சி பகுதியில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தார் அப்பொழுது திடீரென வீரகரனபுதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்ளே சென்று ஆய்வு செய்தார் சிகிச்சையில் உள்ள நோயாளிகளிடம் சிகிச்சை அளிப்பது தொடர்பான விளக்கங்களைக் கேட்டு மருத்துவரிடம் தரமான சிகிச்சை வழங்க கேட்டுக் கொண்டார் மேலும் இது பற்றிய விவரம் ஆவது

பணியில் இருந்தமருத்துவர் ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது ஏற்கனவே இருக்கிற இடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் அதே இடத்தில் கட்டுவதற்கு ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும்

மாற்று இடம் ஏற்படுத்தித் தருமாறு மருத்துவர்கள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கலைகதிரவன் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் பேசி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உறுதி கூறினார்கள்


நிகழ்ச்சியின் போது தென்காசி தெற்கு



மாவட்ட முன்னாள் செயலாளர் சிவ பத்மநாதன் கீழப்பாவூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் ஜேசு ராஜன் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார் கழக முன்னாள் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வேலுச்சாமி வழக்கறிஞர் ஹரி கிருஷ்ணன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வேல்ராஜ் கடையநல்லூர் முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் காசி தர்மம் துரை இளைஞர்அணிதுணை அமைப்பாளர் அசோக் ஹரி கிருஷ்ணன் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் வேலுச்சாமி ராஜபாண்டி செயலாளர் சபரிநாதன் அதிசயபுரம் தெய்வராஜ் குமார் செல்லத்துரை கலிங்கப்பட்டி ராஜா இடையர் தவணை காளி சாமி சீனிவாசகம் ஐயப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# தென்காசி மாவட்டத்தில் ஒற்றை காட்டு யானை அட்டகாசம்

## உயிர் பயத்தில் விவசாயிகள்?



விவசாயமே நாட்டின் முதுகெலும்பு என்று ஊராட்சி முதல் பாராளுமன்றம் வரை பலரும் பேசுவார்கள் விவசாயி சேற்றில் கால் வைக்கவில்லை என்றால் நாம் சோற்றில் கை...வைக்க முடியாது என்றுசொல்லும் அரசு விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதில் மெத்தனம் காட்டுகிறது தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அருகே உள்ள சொக்கம்பட்டி வனச்சரகம் பீட்டில்கொல்லம் மதுரை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி சுமார் 200 மீட்டர் தொலைவு வரை காட்டு விலங்குகள் நடமாட்டம் அதிகரிக்கிறது அதனை ஒட்டி உள்ள தோப்புகளில் மா பலா வாழை தென்னை ஊடுபயிர்களான எள் உளுந்து ஆகியவை பயிரிடப்பட்டுள்ளது காட்டுப்பன்றிகள் மான் மற்றும் மிளாகாட்டெருமை போன்ற விலங்குகள் தொடர்ந்து விவசாய நிலங்களுக்குள் புகுந்து விளை பொருட்களை நாசம் செய்து வருகிறது- இந்நிலையில் கடந்த சில நாட்களாக ஒற்றைக் காட்டு யானைகோட்டை மலை மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி சிவகிரி வரை செல்லும் பகுதியில் இருந்து கீழ்நோக்கி சொக்கம்பட்டி அரசு ஆரம்ப சுகாதாரநிலையம் வரை வருகிறது இதற்கு இடைப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களான தோப்பு மற்றும் வயல் வெளிகளில்தற்போது மாங்காய் மற்றும் பலாப்பழம்சீசன் காலம் என்பதால் மரங்களில் கொத்துக்கொத்தாக காய்த்துள்ளது இரவு நேரத்தில் உலா வரும் ஒற்றை யானை வேலிகளையும் உடைத்து எறிந்து விட்டு உள்ளே நுழைந்து அனைத்து மரங்களிலும் மாங்காய் மற்றும் பலாப்பழங்களை கிளைகளோடு ஒடித்துதின்று விடுகிறது மேலும் காட்டுப் பன்றிகள் காட்டெருமை மான் மற்றும் மிளா போன்ற விலங்குகள் உளுந்து எள் போன்ற பயிர்களை தரைப்பகுதியோடுகிளறி நாசம் செய்கிறது இரவு முழுவதும் விவசாயிகள் காவல் காத்து வரும் வேளையிலும் ஒற்றை காட்டு யானையால் விவசாயிகள் உயிர் பயத்தில் தள்ளாடி வருகின்றனர் ஏற்கனவே இப்பகுதியில் உள்ள ஒரு தோப்பில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வந்த ஒற்றை யானை பிள்ளையார் என்பவரை கிணத்து அருகிலேயே காலால்மிதித்துகொன்று போட்டது குறிப்பிடத்தக்கது இரவு பகல் எப்போது பார்த்தாலும் விவசாயிகள் வயல் மற்றும் தோப்புகளே தஞ்சம் என்று இருந்து வருகின்றனர் இது குறித்து அப்பகுதி விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திற்கும் வனத்துறையினருக்கும் எழுத்துப்பூர்வமாக மனுக்கள் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை உயிரா? பணமா? என்பதில் ஒவ்வொரு நாளும்விவசாய பெருமக்கள் தங்கள் வாழ்நாட்கள் கழித்து வருகின்றனர் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு மாவட்ட வன அலுவலர் தலைமையில் வனக்காவல் படை அமைக்கப்பட்டு ஒற்றை காட்டு யானை இடமிருந்தும் மற்றும் காட்டு விலங்குகளிடமிருந்தும் விவசாயிகளையும் விவசாய விலை பொருட்களையும் காப்பாற்ற வேண்டும் என பொதுமக்கள் உட்பட விவசாயிகள் கண்ணீர் மல்க தெரிவித்தனர் இது குறித்து அப்பகுதி விவசாயிகள் சிலர் கூறியதாவது ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பயிரின் போதும் எங்களுக்கு இது வாடிக்கையாக உள்ளது நாங்கள் நான்கு பேர் அல்லது ஐந்து பேர் குழுவாக சேர்ந்து யானைகளை சத்தமிட்டு விரட்டுவது அது திருப்பி வரும் பொழுது எங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள நாங்கள் ஓடி ஒழியும் துர்பாக்கிய நிலையில்தான் எங்கள் வாழ்க்கை கழிகிறது எங்களுக்கு இரவும் பகலும் ஒன்றாகத்தான் தெரிகிறது நிம்மதியாக ஒரு வாய் சோறு கூட எங்களால் உண்ண முடியவில்லை எந்த நேரம் எந்த விலங்கு வருமோ ஒற்றை யானை வருமோ என்ற உயிர் பயத்தில் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் எங்களையும் விவசாயத்தையும் காப்பாற்ற தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் முழு முயற்சி மேற்கொண்டு வனத்துறை மூலம் வனவிலங்குகளை கட்டுப்படுத்த அனைத்து வித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டனர்

# ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப்பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (22.05.2026) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஈரோடு மாவட்டத்தின் இயல்பான ஆண்டு சராசரி மழையளவு797.95மிமீ ஆகும். நடப்பு ஆண்டில் 22.05.2026 முடிய 107.62 மி.மீ பெய்துள்ளது. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 58.62 அடியாகவும், 6.82 மி.கன அடிநீர் இருப்பும் உள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், பயிர் சாகுபடிக்குத் தேவைப்படும் பூச்சிமருந்துகள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவை போதுமான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பி.எம்.கிசான் பயனாளிகள் அனைவரும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே, பி.எம். கிசான் தவணை தொகை தொட;ந்து கிடைத்திட இதுநாள் வரை தனித்துவ அடையாள எண் பெறாத பயனாளிகள் தங்கள் வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தனித்துவ அடையாள பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், பி.எம். கிசான் கணக்குடன் நிலம் தொடர்பான விபரங்களை இணைத்தல், ஆதார் விபரங்களை வங்கிக் கணக்குடன் இணைத்தல் மற்றும் தங்களது அடையாளத்தை இணைய வழியில் உறுதிபடுத்துதல் (eKYC) போன்ற

விபரங்களை பதிவேற்றம் செய்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். விவசாயிகள்

நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் விவசாயிகளிடமிருந்து 83 கோரிக்கை மனுக்கள் பெற்று மேல் நடவடிக்கைகாக உரிய அலுவலர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர்இரா.சிவக்குமார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சி.லோகநாதன், ஈரோடு வேளாண் விற்பனைக்குழு செயலாளர் கலைச்செல்வி, கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர்கள் கந்தராஜா, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர். வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர். நீர்வள ஆதாரத்துறையின் உதவி செயற்பொறியாளர்கள் உட்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் மற்றும் விவசாய சங்கபிரதிநிதிகள் திரளாக இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

# மாற்று திறனாளிகள் நவீன தொழில்நுட்ப உதவியுடன், தன்னம்பிக்கையுடனும், சுயநிறைவு வாழ்க்கையை வாழ உதவும் நோக்கில் மாபெரும் இலவச மாற்று திறனாளிகளுக்கான செயற்கை கால் அளவீட்டு முகாம் வரும் 24ம் தேதி நடைபெற உள்ளது



தேசிய விருது பெற்ற சமூக சேவை அமைப்பாக நாராயண் சேவா சன்ஸ்தான் அமைப்பு செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் சார்பாக, வரும் 24ம் தேதி கோவை கேஎன்ஜி புதூர் பகுதியில் உள்ள, மகேஷ்வரி பவன் எனும் இடத்தில், மாபெரும் செயற்கை கால் அளவீட்டு முகாம் நடைபெற உள்ளது. இதற்கான விளம்பர பலகை வெளியீட்டு விழா நிகழ்ச்சி இன்று கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் நடைபெற்றது. அப்பொழுது செய்தியாளர்களை சந்தித்து பேசிய முகாம் ஒருங்கிணைப்பாளர் அச்சால் சிங் பட்டீ மற்றும் சமூக செயற்பாட்டாளர் சந்தோஷ் முந்த்ரா ஆகியோர்கூறியதாவது..

கோவையில் இரண்டாவது முறையாக இந்த முகாமினை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், இதில் சுமார் 650க்கும் மேற்பட்ட மாற்று திறனாளிகள் செயற்கை கால், மருத்துவ உதவிகள், மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார். தற்போது ஜப்பான் மற்றும் ஜெர்மனி நாட்டில் உள்ள தொழில்நுட்ப வசதிகளுடன் உருவாக்க படும் செயற்கை கால்களுக்கான அளவீட்டு முகாமாக நடைபெற உள்ளது என்றார்.காலை 8 மணி முதல் மாலை 4மணி வரை நடைபெறும் இந்த மருத்துவ பரிசோதனைகள் நடைபெறும் எனவும், இந்த முகாம் செயற்கை கால்கள் வழங்குவதற்காக மட்டுமின்றி,நவீன மறுவாழ்வு தொழில்நுட்பத்தின் மூலம் மாற்று திறனாளிகளின் வாழ்வில் நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சி என தெரிவித்தார். இங்கு இலகுரக நெகிழ்வான, உடலமைப்புக்கு ஏற்ற வகையில் 3டி பிரிண்டட்டு நாராயண் மாடுலர் செயற்கை கால்களாக டிஜிட்டல் அளவீடுகள் மேற்கொள்ள பட உள்ளது என்றார். பாரம்பரிய செயற்கை கால்களை விட இவை வசதியானதும், நீடித்த பயன்பாட்டிற்க்கும் ஏற்றவையாக இருக்கும். இதனால் மாற்று திறனாளிகள் இயல்பான வாழ்க்கைக்கு திரும்ப வழி வகை செய்யப்படும் என்றும் தெரிவித்தனர். அளவீட்டு செயல் முறைக்கு இரண்டு மாதங்களுக்கு பின்னர், செயற்கை கால்கள் பயனாளிகளுக்கு வழங்க படும் என்றும் தெரிவித்தனர்.

டி.எம்.படேல் இன்டர்நேஷனல் பள்ளியின் தலைவர் ஹரிஸ் பாய் பட்டேல், அச்சால் சிங் பட்டீ, சந்தோஷ் முந்த்ரா, கமல் கிஷோர் அகர்வால், ஜிதேந்திரா புகாலியா, ராஜேஷ் அகர்வால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காட்டுமன்னார்கோவிலில் முன்னாள் முதல்வர் ராஜீவ் காந்தி 35 வது நினைவு தினம் அனுசரிப்பு



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி 35-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. காட்டுமன்னார்கோவில் பகுதி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே அமைந்துள்ள ராஜீவ் காந்தி திருவுருவ சிலைக்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிமொழி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர் ராமன், இளைய அன்பழகன், பாபு ராஜன், கலைவேந்தன், நசீர் அகமது, முகமது ஜின்னா, வாசுதேவன், அழகு ராஜன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் சங்கர் மற்றும் எள்ளேரி ராஜீவ்காந்தி ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். தொடர்ந்து ராஜீவ் காந்தி சிலைக்கு முன்பு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, அவரது நாட்டுப்பற்று, இளைஞர் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட பணிகள் மற்றும் தேசிய ஒற்றுமைக்காக ஆற்றிய சேவைகள் நினைவுகூரப்பட்டன. இதனைத் தொடர்ந்து வன்முறைக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவரும் நாட்டில் அமைதி, சகோதரத்துவம் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் செயல்பட உறுதியேற்றனர். இந்த நிகழ்ச்சியில் அண்ணாதுரை, ராமதாஸ், திருவரசு, தம்பியா பிள்ளை, கண்ணதாசன், ஜாகிர் உசேன், காமராஜ், ஜோதிபாசு உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

### 8 பட்டியல் இனத்தவர்களை தன் அமைச்சர் அவையில் இடம்பெற செய்து

# சமத்துவம் சமூக நீதி ஆட்சி என பாறைச்சாற்றிய முதலமைச்சர் ச.ஜோசப் விஜய்க்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் பாராட்டு



நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை பொது தேர்தலில் தனி பெரும் கட்சியாக வெற்றிபெற்று திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் , இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் கட்சி உள்ளி கட்சிகளின். துணையுடன் ஆட்சி அமைத்தது இந்நிலையில் முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்குபெற வேண்டும் என்று ஆதரவு அளித்த கட்சிகளுக்கு கோரிக்கை வைத்த நிலையில் காங்கிரஸ் அமைச்சரவையில் இடம்பெற்று இருவர் அமைச்சரவையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி , இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தலா ஒரு அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர் மேலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தொடர்ந்து வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்து ஆட்சி நடைபெற்று வருகிறது முதலமைச்சர் மற்றும் ஒன்பது அமைச்சர்கள் பதவேற்ற தொடர்ந்து மேலும் அமைச்சரவை விரிவாக்கம் செய்த நிலையில் சமத்துவம் நிறைந்த சமூக நீதி அரசு என்பதற்கு நான்கு பெண் அமைச்சர்கள் இடப்பெற்றுள்ளதும் த.வெ.க கட்சியில் இருந்து பட்டியலனத்தவர்களான மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அவர்கள் , வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு தென்னரசு அவர்கள், கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு காந்திராஜன் அவர்கள், பத்திரப்பதிவு மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் மாண்புமிகு லோகேஷ் தனபால் அவர்கள் , கால்நடைத்துறை அமைச்சர் மாண்புமிகு கமலி அவர்கள், சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சர் மாண்டுமிகு மதன் ராஜா அவர்கள், என 6 பேரும் ,

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு விஸ்வநாதன் அவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சராகவும் விடுதலை சிறுத்தைகள கடசியை சேர்ந்த மாண்புமிகு வன்னி அரசு அவர்கள் சமூகநீதி நலத்துறை அமைச்சர் என 8 பட்டியலினத்தவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கி சமத்துவத்தை நிலை நாட்டியுள்ளார் மேலும் ஏற்கனவே மாணவ மாணவிகள் விடுதிகளை சமூகநீதி விடுதிகளாக மாற்றம் செயப்பட்ட நிலையில் மொத்தமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையை சமூகநீதி நலத்துறை என பெயர்மாற்றம் செய்திருப்பது இந்த ஆட்சி சமூக நீதி ஆட்சியின் தொடக்கமாக கருதுகிறோம் பெரிதும் வரவேற்கிறோம், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் கோரிக்கையான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கள்ளர் சீர்மரிபினர் நலத்துறை பள்ளிகளை பள்ளிக்கல்வித்துறையின் கொண்டுவர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்

சா.அருணன் நிறுவனத் தலைவர்

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு


# பத்திர பதிவுக்கு ரூ.3 லட்சம் லஞ்சம் வாங்கிய சார் பதிவாளர் கைது

ராமநாதபுரம்: ராமநாதபுரத்தில் பத்திரம் பதிவு செய்ய ரூ.3 லட்சம் வாங்கிய சார் பதிவாளர், இடைத்தரகர் ஆகிய இருவரையும் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீஸார் நேற்று கைது செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட , சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்தவர் மருத்துவர் ஹாலிக் அலாவுதீன். இவர் ராமநாதபுரம் அருகே குயவன் குடி கிராமத்தில் 1.98 ஏக்கர் நிலத்தை தனது தாயார் பெயரில் பத்திரம் பதிவு செய்ய,வெளிப்பட்டணம் சார் பதிவாளர் ராமநாதனை அணுகி உள்ளார். பத்திர பதிவு செய்ய சார் பதிவாளர் ரூ.50 லட்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது. அதன்பின் ஹாலிக் அலாவுதீன், ரூ.3 லட்சத்தை சார் பதிவாளரின் வங்கிக் கணக்கிலும், ரூ .17 லட்சத்தை இடைத்தரகர் அயூப்கான் என்பவரிடம் வழங்கி உள்ளார்.மீண்டும் நிலப் பதிவு செய்ய முயற்சித்த போது, மீதியுள்ள பணத்தை கொடுத்தால் தான் பத்திர பதிவு செய்யப்படும் என சார் பதிவாளர் கூறியுள்ளார். இந் நிலையில் மருத்துவர் ஹாலிக் அலாவுதீன், ராமநாதபுரம் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீஸில் புகார் அளித்தார். அதனையடுத்து போலீஸார் அறிவுரையின்படி, ரசாயனம் தடவிய ரூ.3 லட்சத்தை நேற்று சார் பதிவாளர் ராமநாதனிடம் இடைத்தரகர் அயூப்கான் கொடுக்கும் போது மறைந்திருந்த லஞ்சஒழிப்பு போலீஸார் இருவரையும் கையும் களவுமாக கைது செய்தனர்.

## கட்டாய கல்வி உரிமை திட்டத்தில் , சேர்ந்துள்ள மாணவர்களிடம் பிற மாணவர்களுக்கு இணையாக கல்வி கட்டணம் வசூலிப்பதாக புகார் வந்தால் ஆய்வு மேற்கொள்ள துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்படும்

### மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கோவையில் எச்சரித்துள்ளார்



கோவை பி ஆர் எஸ் மைதானத்தில் கோவை மாவட்டத்தில் புதிய கல்வியாண்டை முன்னிட்டு தனியார் பள்ளி பேருந்துகள் மீது தீவிர ஆய்வினை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் மேற்கொண்டார். மாவட்டம் முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ள 1775 பள்ளி வாகனங்களில் 562 வாகனங்கள் ஆய்விற்கு வராததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆய்வுக்குபின் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் , ஆய்வுக்கு வந்த வாகனங்களில் சுமார் 30 பேருந்துகளில் சிறிய அளவிலான பழுதுகள் மற்றும் குறைபாடுகள் கண்டறியப்பட்டதாகவும், அவற்றை ஒரு வாரத்திற்குள் சரிசெய்ய வேண்டும் என பள்ளி நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஃபிட்னஸ் சான்றிதழ் இல்லாதது, மாணவர்கள் ஏறும் பிளாட்பாரம் வசதி இல்லாதது உள்ளிட்ட காரணங்களால் 5 பள்ளி வாகனங்களின் அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் ,

பள்ளி பேருந்துகளில் கண்காணிப்பு கேமராக்கள் முறையாக செயல்பட வேண்டும் என்றும், அவசர கால சூழ்நிலைகளில் பயன்படுத்த தீயணைப்பான் கட்டாயமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒட்டுநர்களுக்கு சிறப்பு பயிற்சியும் வழங்கப்பட்டு

அதில், ஒட்டுநர்களின் கண்பார்வை பரிசோதனை, அவசர வெளியேறும் கதவுகளை பயன்படுத்தும் முறை, மாணவர்களின் பாதுகாப்பு நடைமுறைகள் போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்படுவதாக வும், அதேபோல், பள்ளி பேருந்துகளில் ஜிபிஎஸ் கருவிகள் கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும் என்றும், அது தொடர்பான விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பது கண்காணிக்கப்படும் என்றும் உறுதியளித்தார். கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் சேர்ந்துள்ள

மாணவர்களிடம் அதிக கட்டணம் வசூலிப்பதாக குறிப்பிட்ட பள்ளிகள் மீது புகார் வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஒட்டுநர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்படுவதாக புகார்கள் வந்தாலும் சம்பந்தப்பட்ட பள்ளிகள் மீது விசாரணை நடத்தப்படும் என்றும் ஆட்சியர் தெரிவித்தார்.



சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற எளிமையான விழாவில், விசிக திண்டிவனம் சட்டமன்ற உறுப்பினர் வன்னி அரசு மற்றும் ஐயுஎம்எல் பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். ஷாஜகான் ஆகிய இருவருக்கும் தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் புதிய அமைச்சர்களாகப் பதவிப்பிரமாணமும், ரகசியக்காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

## தனது சூல்நிலையை பயண்படுத்தி தன்னிடம் 50 லட்சம் கேட்டு மிரட்டும் தனது, முன்னாள் தோழிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி பாதிக்க பட்ட பெண் மாநகர காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளார்



கோவை மாவட்டம் காந்திமாநகர் பகுதியை சேர்ந்தவர் தன்யா - 35. இவரது கணவர் பெயர் கருணாநிதி. இவர் புகைப்பட தொழில் செய்து வருகின்றார். இந்த நிலையில் இன்று கணவன் மனைவி இருவரும் கோவை மாநகர காவல் ஆணையர் கண்ணனை சந்தித்து புகார்மனு ஒன்றை அளித்தனர். தொடர்ந்து காவல் ஆணையர் அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய கணவன் மனைவி இருவரும் கூறியதாவது.. திருமணம் ஆகி இரு குழந்தைகள் உள்ள நிலையில், சுய தொழில் செய்ய வேண்டும் என கூறி, கடந்த 2022ம் ஆண்டு தனது நண்பர்களிடம் கடன் வாங்கி இருந்தேன். இதனை திரும்ப செலுத்த முடியாததால் நண்பர்கள் என்மீது காவல்நிலையத்தில் புகார் செய்தனர். இதன் பேரில் தன் மீது வழக்கு பதிவு செய்ய பட்டு வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதற்காக நீதிமன்ற பிணையும் நான் பெற்றுள்ளேன். இந்த நிலையில் எனது சூல்நிலையை புரிந்து கொண்ட, மசக்காளிபாளையத்தை சேர்ந்த திமுக மகளீரணி நிர்வாகி கலைச்செல்வி - 35 வடவள்ளியை சேர்ந்த திமுக நிர்வாகி சங்கீதா 35. ஆனைமலையை சேர்ந்த சந்தியா 27. இவர்கள் மூவரும் என்னிடம் நன்றாக தோழி யாக பழகி தனது சூல்நிலையை வைத்து, தன்னிடம் 50 லட்சம் கேட்டு மிரட்டி இவர்களுடன் மணிகண்டன் என்ற நபரும் சேர்ந்து கொண்டு 2022ம் ஆண்டு என்மீது பதிய பட்டுள்ள வழக்கை எனது புகைபடத்துடன் இணைத்து தினசரி நாழிதலில் விளம்பரப்படுத்தி என்னை அசிங்க படுத்துகின்றனர். மேலும் நேற்று இவர்கள் நாண்கு பேரும் சேர்ந்து எனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, பணம் கேட்டு மிரட்டிய துடன் கொலை மிரட்டலும் விடுத்தனர். எங்களுக்கு பணம் கொடு இல்லை என்றால் நாங்கள் கூறுகின்ற நபருடன் உல்லாசமாக இரு எங்களுக்கு எதாவது ஒன்று தேவை என மிரட்டி வருகின்றனர். எனவே இவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு அளித்துள்ளதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொது மக்களுக்கு இடையூறாக அமைக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நகராட்சி ஆணையர் திவ்யா முன்னிலையில் துவங்கி இருந்த நிலையில் பேருந்து நிலையத்தில் உள்ள ஆக்கிரமிப்பு இடங்களை அகற்றி வந்தனர் இன்று அதனைத் தொடர்ந்து சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பு இடங்களை அகற்றி வருகின்றனர் நகராட்சி அதிகாரிகள்

## Twisha Sharma's husband ready to surrender, MP high court orders second autopsy in case



*The woman in her 30s, originally from Noida in Uttar Pradesh, was found dead on May 12 at her marital home in Bhopal's Bagh Mugalia Extension.*

*Samarth Singh, husband of Twisha Sharma, who recently died under mysterious circumstances at her matrimonial home in Bhopal, submitted before the Madhya Pradesh high court on Friday that he was ready to withdraw his bail plea and surrender in the case.*

*However, he urged the court to direct the trial court to hear and decide his bail application on the same day.*

*The woman in her 30s, originally from Noida in Uttar Pradesh, was found dead on May 12 at her marital home in Bhopal's Bagh Mugalia Extension. However, her family alleged foul play and pointed to injury marks on her body. They claimed she had told them that her husband had assaulted her.*

*Second autopsy ordered in death case*

*The high court ordered a second post-mortem of Sharma's body and directed that it be conducted by a team of doctors from the All India Institute of Medical Sciences (AIIMS), New Delhi, according to Bar and Bench.*

*Justice Avanindra Kumar Singh clarified that the second post-mortem would take place in Bhopal, and a special flight would be arranged to bring the doctors for the procedure.*

*The previous post-mortem report stated that Twisha Sharma died due to "ante-mortem hanging by ligature". It also mentioned multiple simple injuries caused by blunt force on different parts of her body.*

*Speaking to news agency PTI, lawyer Anurag Shrivastava, representing the family, said that they had approached the high court seeking a second post-mortem due to alleged discrepancies in the first autopsy conducted at AIIMS Bhopal.*

*Two days earlier, Judicial Magistrate First Class Anudita Gupta in Bhopal had rejected the family's request, saying that the court's conscience must be satisfied before ordering a re-post-mortem. The magistrate had observed that minor procedural lapses alone would not compel the court to order a second autopsy.*

*CBI probe ordered in case*

*Earlier, the Madhya Pradesh government recommended a Central Bureau of Investigation (CBI) probe into the Twisha Sharma death case and gave its consent for the agency to take over the investigation.*

*Police had registered an FIR under Sections 80(2), 85 and 3(5) of the Bharatiya Nyaya Sanhita, along with relevant sections of the Dowry Prohibition Act, against her husband Samarth Singh and Giribala Singh.*

## மேட்டூர் அருகே காவிரி கரையில் அகழாய்வு பணியை தொடங்கிய தொல்லியல்துறை



மேட்டூர்: மேட்டூர் அருகே தெலுங்கனூரில் அகழாய்வுபணிதொடங்கப்பட்டுள்ள நிலையில், அரிய வகை பொருட்கள் கிடைக்கும் என தொல்லியல் துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மேட்டூரை அடுத்த கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட தெலுங்கனூர் காவிரி கரையோரப் பகுதியில் அமைந்துள்ளது.தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை 2025-2026-ன் படி அகழாய்வு மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டது. இந்த இடம் 1990 வரை அடர்ந்த வனப்பகுதியாக இருந்துள்ளது.அணைநீர்மட்டம் சரியும் போது, அப்பகுதியில் ஏராளமான புதைகுழிகளும், கல் வட்டங்கள் இருப்பதை காண முடியும். இந்த கல் வட்டங்கள் உள்ளூர் மக்களால் 'பாண்டியன் திட்டுகள்' என அழைக்கப்படுகின்றன. தொல்லியல் துறையினர் ஆய்வு செய்ததில் வாள், அம்பு, முதுமக்கள் தாழி, பெரிய மற்றும் சிறிய அளவிலான பானை மற்றும் கருவிகள் கிடைத்துள்ளன. இதையடுத்து, அப்பகுதியில் தொல்லியல் துறையினர்கள ஆய்வு செய்து விரிவான அறிக்கை அளித்ததன் பேரில் தமிழக அரசு அப்பகுதியில் முறையான அகழாய்வு செய்ய முடிவெடுத்தது. தற்போது அணை நீர்மட்டம் சரிந்துள்ள நிலையில் அகழாய்வு பணிகளை தொல்லியல் துறையினர் தொடங்கியுள்ளனர்.

இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் கூறியதாவது: இறந்து போனவர்களின் உடல்களை தடிமனான சுடு மண் பானைகளில் வைத்து நிலத்தில் குழி தோண்டி புதைத்து விடுவார்கள். இவை முதுமக்கள் தாழி என அழைக்கப்படுகிறது. அதில் இறந்து போனவர்களின் உடல்கள் மட்டுமின்றி அவர்கள் பயன்படுத்தி வந்த பொருட்களும் புதைக்கப்படும்.

முதுமக்கள் தாழிகளைச் சுற்றி கற்களை பதித்து வைப்பதால், கல் வட்டங்கள் (பாண்டியன் திட்டு) என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் 1,000-க்கும் மேற்பட்ட கல் வட்டங்கள் உள்ளன. இப்பகுதியில் ஆய்வுகள் தொடங்கிய நிலையில் பல்வேறு காரணங்களால் பல கல் வட்டங்கள் சேதமடைந்துள்ளன.

முதற்கட்டமாக 77 கல் வட்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் 40-க்கும் மேற்பட்டவை நல்ல முறையில் உள்ளன. இதில் 10 கல் வட்டங்களை தேர்வு செய்து அகழாய்வுபணிதொடங்கப்பட்டுள்ளது.

தற்போது வரை நடந்த பணியில் முதுமக்கள் தாழி, பானை இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை தொல்லியல் துறை அதிகாரிகள் மூலம் முழுமையாக ஆய்வு செய்யும் போது கீழடி, சிவகளை போல பழமையான பொருட்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெலுங்கனூரில் நடத்தப்படும் அகழாய்வு மூலம் சிறிய அளவிலான முதுமக்கள் தாழி, பானை இருப்பதால் எலும்புகள், அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் உள்ளிட்டவை கிடைக்கும். குறிப்பாக புதிய கற்கால மனிதர்கள் மற்றும் இரும்பு கால மனிதர்கள் வரலாறு தெரிய வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

எஃகுவாளால்தொடங்கிய அகழாய்வு:

மேட்டூரை அடுத்த கருங்கலூரை சேர்ந்தவரும், தொல்லியல் ஆய்வாளரான ரமேஷ் ஆராய்ச்சி படிப்பின்போது மேற்கொண்ட ஆய்வில் பெரிய அளவிலான வாள் கிடைத்துள்ளது.இதனை முழுமையாக ஆராய்ச்சி செய்த போது சுமார் 3,500 ஆண்டு பழமையானது மற்றும் எஃகு பொருளால் ஆனது என தெரியவந்தது. இதன் காரணமாக, தெலுங்கனூர் காவிரி கரையில் அகழாய்வு மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.